

# முன்னுரை

# முன்னுரை

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களில் பாரதி, பாரதிதாசனுக்குப் பிறகு கண்ணதாசன் முக்கியமானவராகக் கருதப்படுகின்றார்.

கண்ணதாசன் என்றால் திரையிசைப் பாடல்களைச் சிறப்புற எழுதுபவர் என்ற கருத்தே பெரும்பான்மை மக்களிடையே இருந்து வருகின்றது. நான் பள்ளியில் பயின்று வந்த காலத்தில் கண்ணதாசனின் எண்ணற்ற திரைப்பாடல்களைக் கேட்டு மகிழ்ந்ததுண்டு. அப்பாடல்கள் இனிய, எளிய சொல்லாட்சிகளுடன் பொருளாழம் பொதிந்தனவாக, சுய அனுபவங்களை வெளிப்படுத்துவனவாக அமைந்திருப்பதை அறிந்தேன். மேலும், பிற கவிஞர்களிடமிருந்து இவரை உயர்த்திக் காட்டும் வகையில் இவர் பாடல்களில் ஏதோ ஒரு தனித்தன்மை இருப்பதை உணர முடிந்தது. கண்ணதாசனின் படப்பாடல்கள் மனிதர்களின் மனத்தைப் படம் பிடித்துக் காட்டுவது போல் மெய்யியல் தன்மையில் அமைந்திருப்பதை அறிய முடிந்தது.

பின்னர், இவரது கவிதைத் தொகுதிகளைப் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. கவிதைகளில் அரசியல் ஆட்சி, மொழிப்பற்று, தேசிய உணர்வு, தன்னுணர்வு வெளிப்பாடு, கொள்கை மாற்றங்கள், சமுதாய நலன் போற்றல், பக்தி உணர்வு போன்ற பல்வேறு கூறுகள்

பாடுபொருளாக அமைந்திருந்தன. கண்ணதாசனின் கவிதைகள் சமுதாய அவலங்களைப் படம் பிடித்துக் காட்டுவதும், புலம்புவதுமான சாதரண வட்டத்திற்குள் நின்று விடுகின்றனவா? அல்லது இவற்றைக் கடந்த ஒரு தனித்தன்மையோடு சமுதாயச் சீர்கேடுகளுக்குத் தீர்வு தருகின்றனவா என்பதை அறிய விரும்பினேன். அவ்வகையில் கண்ணதாசன் கவிதைகளில் காலமாற்றத்திற்கேற்பச் சில கருத்து மாற்றங்கள் நிலவுவதையும், மனிதனைப் பற்றியும், மனிதகுல வளர்ச்சியைப் பற்றியும், பாடுபொருள்கள் அமைந்திருந்த தன்மையையும் காணமுடிந்தது.

## ஆய்வு நோக்கம்

மனிதநேய உணர்வை மண்ணில் நிலைநிறுத்தும் வகையில் அமைந்த எழுத்துக்களே காலங்காலமாக மக்களால் போற்றப்பட்டு வருகின்றன. சங்ககாலந் தொடங்கித் தற்காலம் வரையிலான கவிதைகளில் மனித நல உணர்வுகளை வளர்ப்பதையே புலவர்களும், கவிஞர்களும் தங்கள் நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

சங்ககால இலக்கியங்கள் வீரத்தையும், காதலையும் முதன்மைப்படுத்தி பாடியபோதும் அவற்றின் வழி மக்களிடையே மனிதநேயப் பண்புகளை வளர்க்கத் தவறவில்லை. வாழ்வியல் நெறிகளை வகுத்துக் காட்டுவதன் மூலம் அவை மனிதநலத்தைப் போற்றின. உலகியலறிவையும் வாழ்க்கை அனுபவத்தையும் உணர்த்தும் வகையில் பல பாடல்களைப் புனைந்த ஔவையார், 'அரிதரிது

மானிடராதல் அரிது' என்று கூறுவதன் மூலம் மனிதப்பிறப்பின் மகத்துவத்தை விளக்கியுள்ளார்.

நீதி நூல்களில் தலைமை சான்றாகக் கருதப்படும் திருக்குறள், மனிதன் சமுதாயத்தில் எப்படி வாழ வேண்டும், எந்தெந்த நீதிநெறிகளைக் கடைபிடிக்க வேண்டும் என்ற விவரங்களை விரித்துக் கூறுகின்றது. எவ்வித பாகுபாடுமற்ற நிலையில் எக்காலத்தும், எல்லோருக்கும் பொருந்தும் வகையில் மனிதனின் உள்ளத்து இயல்பை ஆராய்ந்து அவன் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளை அது எடுத்தியம்புகிறது. பிறப்பினால் அனைவரும் சமம் என்று கூறியதோடு பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாது இருக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துவதால் திருக்குறள் இன்றளவும் சமுதாய நலன் போற்றும் நூலாகக் கருதப்படுகின்றது.

இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரமும், மணிமேகலையும் சமுதாயத்தின் சாதாரணக் குடிமக்களாகக் கருதப்படும் வணிகர்களைப் பற்றி எடுத்தியம்புவதால் காலத்தை வென்று நிற்கின்றன. அறத்தையும் ஒருமைப்பாட்டு உணர்வையும் வளர்ப்பதே இவற்றின் நோக்கமாகும்.

பக்தி இயக்கக் கால இலக்கியங்கள் புலன்களை அடக்கி அன்பை வளர்க்கும் வழிவகைகளைக் கூறுவதன் மூலம் மக்கள் நலன்போற்றின. திருமூலரும், நாயன்மார், ஆழ்வார்களும் அன்பின்

சிறப்பையும், பக்தியின் பெருமையையும் எடுத்துக் கூறி மக்களின் உணர்ச்சிப் போக்கை நல்வழிப்படுத்த முனைந்தனர்.

இதிகாசங்கள் எனப் போற்றப்படும் இராமாயணமும், மகாபாரதமும் மனிதநலத்தைப் போற்றியதாலேயே மனிதன் கடைபிடிக்க வேண்டிய நன்னெறிகளை நவில்கின்றன. கம்பர், 'மானுடம் வென்றதம்மா' என்று கூறி மனிதகுலத்தைப் பற்றிச் சிந்தித்ததால் மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்றார்.

மனித ஆற்றலை மனிதனுக்கு உணர்த்தி மனிதநேயத்தைச் சமயத்தின் மூலம் வளர்த்த ஒப்பற்ற நூல் பெரியபுராணம் ஆகும். சித்தர்கள் பக்தி என்ற பெயரில் நடைமுறையில் இருக்கும் மூடப்பழக்க வழக்கங்களையும் சாதி மத வேறுபாடுகளையும் சாடி மனிதனை மனிதனாக்கும் வழிமுறைகளைப் பற்றிப் பாடின ர்.

மக்களிடையே எத்தகைய வேறுபாடுமின்றி, அன்பு கொண்டவரான தாயுமானவர் சமயப் போராட்டங்களைக் கடந்த சமரசத்தை நிலைநாட்டத் தன் பாடல்களைப் பயன்படுத்தினார்.

இஸ்லாம் தந்த இலக்கியமான, சீறாப்புராணமும், கிறித்தவ சமய இலக்கியமான, இரட்சணிய யாத்திரிகமும் அன்பையும், அமைதியையும் நிலவச்செய்யும் நோக்கில் எழுந்த பண்பட்ட இலக்கியங்களாகும்.

பாரதியார் தான் வாழ்ந்த காலத்தின் சமுதாயத் தேவையான தேசிய உணர்ச்சியைத், தன் பாடல்கள் வழி ஊட்டி மனிதநேய உணர்வை வெளிப்படுத்தினார். ஏழைகளும் அடிமைகளுமற்ற இனிய பாரதத்தைத் தன் பாடல்களில் படைத்துக் காட்டினார்.

பெரியாரின் சுயமரியாதைக் கருத்துக்களில் ஈடுபாடு கொண்ட பாரதிதாசன், சமுதாயத்தில் நிலவும் அறியாமை இருளை அழிக்கும் பணியைத் தன் கவிதைகள் மூலம் மேற்கொண்டார்.

பாரதி, பாரதிதாசனைத் தொடர்ந்து தமிழ்க்கவிதை உலகம் மக்களைப் பற்றிச், சிந்திப்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்தது. மனிதனின் தேவைகளும், நுகர்ச்சிகளும் அனைவருக்கும் பொதுவானவை. ஆனால், நடைமுறை வாழ்வில் மக்களிடையே பல ஏற்றத் தாழ்வுகள் நிலவுகின்றன. சாதி மதப் பிரிவினையால் அடிமைப்பட்டும், வறுமையால் சிறுமைப்பட்டும் அவலவாழ்வு வாழும் மக்களைப் பற்றிப் பல கவிதைகள் எண்ணுகின்றன. இவை மனித சமுதாயத்தில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்க, மனித ஆற்றலை உணர்த்தி மனிதப் பண்பை வளர்ப்பதையும், சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

கண்ணதாசன் தன் இனிய எளிய கருத்தாழம் மிக்க கவிதைகளால் மானுட வர்க்கத்தைப் பற்றிப் பாடி மக்கள் மனத்தைக் கவர்ந்தார். மனிதநேயம் ஏட்டிலே மட்டும் இருக்கும் கொள்கையன்று. அது மனிதரை நெறிப்படுத்த உதவும் உயரிய ஒழுக்க விதிகளைத்

தன்னகத்தே கொண்டது என்பதைக் கண்ணதாசன் தன் கவிதைகளில் எடுத்தியம்பினார்.

"கவிஞர் பிறருக்கு வந்த துன்பத்தைத் தனக்கு வந்த துன்பம் போல் கருதும் இரக்க மனம் படைத்தவர். குழந்தை போன்ற கள்ளங்கபடமற்ற உள்ளங் கொண்டவர்; அனைவரிடமும் மிகுந்த பாசத்தோடு நடந்து கொள்வார்; தன் சிரிப்பிலேயே மனித நேயத்தைக் காட்டியவர்; அவரிடம் யாரும் எப்போதும் எந்தவிதமான உதவியையும் பெறலாம்" என்ற கண்ணதாசனைப் பற்றிய மதிப்பீடும், பல ஆண்டுகள் கண்ணதாசனின் உதவியாளராகப் பணியாற்றிய இராம. கண்ணப்பன், கண்ணதாசனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள செய்திகளும் கண்ணதாசன் என்ற மனிதநேயம் மிக்க மனிதரை இனங்காட்டின.

இயல்பாகவே மனிதநேய உணர்வு கொண்ட கண்ணதாசனின் கவிதைகளில் அவ்வுணர்வு வெளிப்படும் பாங்கை ஆய்ந்தறிவதன் மூலம், மக்களால் போற்றி மதிக்கப்படும் ஒரு கவிஞன் சமுதாய நலன் குறித்து எந்த அளவு பொறுப்புணர்வும் கொண்டிருக்கிறான் என்பதைக் கண்டறிய விரும்பினேன். மனித சமுதாயம் பற்றியும் மக்கள் நலன் பற்றியும் பாடிய பிற கவிஞர்களின் படைப்புகளில் இல்லாதொரு ஈர்ப்பு எந்த வகையில் கண்ணதாசனின் படைப்புகளில் இடம் பெற்றுள்ளது என்பதைக் கண்டறியும் முனைப்போடு கண்ணதாசனின் கவிதைத் தொகுதிகள் மட்டும் ஆய்வுக்கு முதன்மைக் கூறாக எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ளன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பாரம்பரியமுடைய தமிழ்க் கவிதையுலகில் கவிஞர்களின் நோக்கும், போக்கும் காலத்திற்கேற்ற வகையில் அமைந்துள்ளன. இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமுதாய, அரசியல், பொருளாதார நிகழ்ச்சிகளின் விளைவாகச் சமுதாய அமைதி சீர்குலைந்தது. இந்நிலையை மாற்றி அமைதியை நிலைநாட்ட மனிதநலச் சிந்தனைகளை மக்கள் மனத்தில் பதிக்க வேண்டிய தேவை அவசியமாகியது. இந்நிலையில் பாரதியார், பாரதிதாசனைத் தொடர்ந்து மக்களால் சிறந்த கவிஞரென மதிக்கதக்க நிலையிலுள்ள, கண்ணதாசனின் கவிதைகள் மனிதத்தைப் பற்றி வெளிப்படுத்தும் சிந்தனைகளை அறிய வேண்டியது முக்கியமானதாகும். அன்றுதொட்டு இன்றுவரை மனிதத்தைப் போற்றி மதித்த கவிதைகளே மக்கள் மனத்தில் போற்றி மதிக்கதக்கனவாய் இருந்து வந்துள்ளன. எனவே, கண்ணதாசனின் கவிதைகளில் பயின்று வரும் மனிதநேய உணர்வுகளை ஆய்ந்து, சமுதாயவியல் அடிப்படையில் மதிப்பீட்டு முறைத் திறனாய்வு செய்வதே இந்த ஆய்வின் முதன்மை நோக்கமாகும்.

கண்ணதாசனின் கவிதைத் தொகுதிகளில் இடம் பெற்றுள்ள கவிதைகள் பாடப்பட்ட காலச்சூழல், அவர்தம் கவிதைகளில் பாடுபொருளைக் கையாள்வதில் தோன்றிய நிறை குறைகள் ஆகியவற்றை மதிப்பிடுவதன் மூலம் அந்நோக்கத்தை இந்த ஆய்வு நிறைவேற்றும்.

## ஆய்வு எல்லை

கவிஞர் கண்ணதாசனின் கவிதைத் தொகுதிகளைப் பற்றிய விளக்கமுறை ஆய்வு, முன்னரே மேற்கொள்ளப் பெற்றுள்ளது. இத்தகு பொதுநிலை ஆய்வின்றி, ஒவ்வொரு கூறுபற்றியும் தனிநிலை ஆய்வுகளை மேற்கொண்டால் தான் பொருத்தமான முடிவுகளை உரைவியலும். அவ்வகையில் நூல்வடிவில் வெளிவந்துள்ள கண்ணதாசனின் ஏழுகவிதைத் தொகுதிகளில் இடம் பெற்றுள்ள கவிதைகளை முதன்மையாக்கி, ஆய்வு எல்லை வரையறுக்கப் பெற்றுள்ளது. அவற்றுள் முதல் ஆறு தொகுதிகள் கண்ணதாசன் வாழ்ந்த காலத்திலும், ஏழாவது தொகுதி அவரது மறைவிற்குப் பின்னரும் வெளிவந்தன. முதற்தொகுதி 1957 ஆம் ஆண்டிலும், இரண்டாம் தொகுதி 1958 மே ஆண்டிலும், மூன்றாம் தொகுதி 1971 ஆம் ஆண்டிலும், ஏழாம் தொகுதி 1982 ஆம் ஆண்டிலும், முதற்பதிப்பு வெளியிடப் பெற்றுள்ளன. இந்த ஏழு தொகுதிகள் வாயிலாக விளக்கப் பெறும் மனிதநேய சிந்தனைகளே, இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ளன.

## ஆய்வுப் பகுப்பு

“கண்ணதாசன் கவிதைகளில் மனிதநேயக் கோட்பாடுகள்” பற்றிய இந்த ஆய்வு ஏழு இயல்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது.

முன்னுரை

1) மனிதநேயம் ஒரு விளக்கம்

2) மனிதநேயக் கோட்பாடு - வரையறைகள்

3) இந்திய மரபில் மனிதநேயமும் அதன் வளர்ச்சியும்

4) இலக்கியங்கள் காட்டும் மனிதநேயம்

5) கண்ணதாசனும் அவரது கவிதை வரலாறும்

6) கண்ணதாசனின் சமுதாயச் சிந்தனைகள்

7) கண்ணதாசனின் பொருளாதாரப் பொதுவுடைமைச் சிந்தனைகள்

முடிவுரை.

என்று இயல் தலைப்புகள் வரையறுக்கப் பெற்றுள்ளன.

"மனிதநேயம் ஒரு விளக்கம்" என்ற முதல் இயல், மானுடத்தின் மாண்பு, தமிழிலக்கியத்தின் மனித நேயத்தின் தொன்மை, உலகளாவிய மரபு, அடிப்படை உரிமை பெறல், . சமத்துவ நிலை ஆகிய செய்திகள் உணர்ந்து உரைக்கப்பட்டுள்ளன.

"மனிதநேயக் கோட்பாடு - வரையறைகள்" என்னும் இரண்டாம் இயலில் மானுடம் போற்றும் சமுதாயமே உயர்வடைய

முடியும், உலகினில் மக்கள் எல்லாம் சமம், மக்கள் சரிநிகர் சமானம் எல்லாத்துறையிலும் எவரும் நிகரே என்பதை வலியுறுத்துகின்றது.

"இந்திய மரபில் மனிதநேயமும் அதன் வளர்ச்சியும்" என்ற மூன்றாம் இயலில் கவிஞர்கள் மனிதநேயத்தின் உயரிய இலட்சியங்களை தம் படைப்புகளின் கருப்பொருளாக அமைத்துள்ளார்கள்.

"இலக்கியம் காட்டும் மனிதநேயம்" என்னும் நான்காம் இயலில், மனிதநேயம் என்ற சொல்லின் பொருண்மையும் விளக்கமும் சுட்டப்பட்டு, சங்ககாலம் முதல் இக்காலம் வரையிலான தமிழ் இலக்கியங்களில் மனிதநேய உணர்வு வெளிபடுத்தப் பெற்றுள்ள பான்மைச் சுட்டப் பெறும்.

"கண்ணதாசனும் அவரது கவிதை வரலாறும்" என்னும் ஐந்தாம் இயலில், கண்ணதாசனின் கவிதைப் பொருண்மை பற்றியும், அவரது கவிதைகள் பிற கவிஞர்களின் கவிதைகளிலிருந்து மாறுபட்டுக் காணப்படும் முறை பற்றியும் விளக்கிக் கூறும்.

"கண்ணதாசனின் சமுதாயச் சிந்தனைகள்" என்ற ஆறாம் இயலில், கண்ணதாசனின் கவிதைகளில் புலனாகும். சமுதாய நல உணர்வும், சமுதாயத்தைச் சீர்படுத்தக் கவிதைக் கூறும் மனித நேய வழிமுறைகளும் விளக்கமாகச் சுட்டப்பட்டு, பரந்துபட்ட மனிதநேய உணர்வுடன் கூடிய சமுதாயச் சிந்தனை கவிதைகளில் இடம்

பெற்றுள்ளதா என ஆராயப்பட்டு முடிவுகள் கூறப் பெறும். மேலும் இன்றைய அரசின் நிலை பற்றியும், அதில் ஏற்பட வேண்டிய மாற்றம் பற்றியும், மனித நலம் போற்றும் அரசியல் பற்றிய கவிஞரின் கருத்துகள் பற்றியும் சுட்டிக் காட்டும்.

கண்ணதாசனின் பொருளாதாரப் பொதுவுடைமைச் சிந்தனைகள்" என்னும் ஏழாம் இயல், சமுதாயத்தில் நிலவும் பொருளியல் முரண்பாடுகள் பற்றியும், சமத்துவ சமுதாயம் அமைக்கக் கண்ணதாசன் கூறும் பொருளாதாரத் தீர்வு பற்றியும் விளக்கும்.

முடிவுரையில் முன்னர் உள்ள ஏழு இயல்களிலும் கண்டறியப்பட்டுள்ள முடிவுகள் அனைத்தும் தொகுத்தளிக்கப் பெறும்.

இறுதியில் பின்னிணைப்புகளும், ஆய்வாளர்க்குப் பயன்பட்ட துணைநூற் பட்டியலும் தரப்படும்.